Judicial Form No.53

(See Rule 42)

DEPOSITION OF WITNESS (Chapter XXIII, Cr.P.C.)

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, FAST TRACK COURT, HOSUR

Calendar
Miscellaneous
Preliminary Register — STC. 77/2023
Sessions prosecution
depositions of witness for — PW1 cross

| | | |
|---|---|---|
| Time | : | 4.32pm - 4.42 pm |
| Name | : | திரு. Ramareddy |
| Husband name | : | திரு. |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on 20th day of September 2024.

(எதிரி நீதிமன்றத்தில் ஆஜர் இல்லை )

குறுக்கு விசாரணை

1) நான் SSLC படித்துள்ளேன். நானும், எதிரி நரசிம்மானும் ஒரே கம்பெனியில் வேலை செய்தோமா என்றால் ஆமாம். நானும், எதிரியும் எத்தனை வருடங்களாக நண்பர்கள் என்றால் 20 வருடங்களாக நண்பர்கள். எதிரி ரியல் எஸ்டேட் தொழிலுக்காக என்னிடம் பணம் வாங்கியதாக புகாரில் சொல்லியுள்ளேன் என்றால் ஆமாம். என்னுடைய புகார் மனுவில் எதிரி 2022 ஜுன் மாதத்தில் பணம் வாங்கியதாக சொல்லியுள்ளேன் என்றால் ஆமாம். எதிரிக்கு எந்த தேதியில் பணம் கொடுத்தேன் என்று புகாரில் குறிப்பிட்டு

சொல்லவில்லை என்றால் சரிதான். எந்த இடத்தில் வைத்து எதிரிக்கு பணம் கொடுத்தேன் என்று புகாரில் சொல்லவில்லை என்றால் சரிதான். என்னுடைய வீட்டில் வைத்து கொடுத்தேன். நான் எதிரிக்கு பணம் கொடுக்கும் போது என்னையும், எதிரியையும் தவிர வேறு யாரவது இருந்தார்களா என்றால் இல்லை. நான் கூட்டு குடும்பமாக இருக்கிறேனா என்றால் ஆமாம். இதற்கு முன்பு எனக்கும், எதிரிக்கும் கொடுக்கல் வாங்கல் இருந்ததா என்றால் ஆமாம். கொடுத்து வாங்கியுள்ளேன்.

2) இதற்கு முன்பு எனக்கும், எதிரிக்கும் இருந்த கொடுக்கல், வாங்கல் குறித்து வழக்கில் சொல்லவில்லை என்றால் சரிதான். நான் எதிரிக்கு பணத்தை ரொக்கமாக கொடுத்தேனா என்றால் ஆமாம். எதிரிக்கு எந்த Denomination ல் பணம் கொடுத்தேன் என்றால் ரூ.500 நோட்டுகளாக ரூ.2,50,000/-ம் வீகிதம் 2 கட்டுகள் கொடுத்தேன். எதிரிக்கு கொடுத்ததாக சொல்லும் பணத்தை வங்கியில் இருந்து எடுத்து கொடுத்தேனா என்றால் இல்லை.

எதிரி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்தி வைக்கப்படுகிறது.

ஓம்/ திருமதி.V.பார்கவி.,B.A.,B.L.,L.L.M.,
குற்றவியல் நீதித்துரை நடுவர்
விரைவு நீதிமன்றம்
ஒசூர்.